# தினசரி சந்தை நிலவரம் - எனது வாழ்க்கையில் ஏற்படுத்திய திருப்பு முனை

K.மாரியப்பன்
த/பெ கருப்பணன்
கீழப்பெருமாள்பட்டி
உசிலம்பட்டி (Tk)
மதுரை (Dt)
9944862552



மதுரை மாவட்டம் கருமாத்தூர் பகுதியில் வசித்து வரும் K.மாரியப்பன் ஆகிய நான் கடந்த பல வருடங்களாக எனது நிலத்தில் கத்திரிக்காய், வெண்டை, சம்பங்கி, புடலங்காய், சுரைக்காய், கொத்தவரை மற்றும் தக்காளி ஆகிய பயிர்களை பயிரிட்டு விவசாயம் செய்து வருகிறேன். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தினசரி சந்தை நிலவரம் (www.indg.in) ஏற்படுத்திய மாற்றம் மற்றும் எனது அனுபவங்களை மீண்டும் ஒருமுறை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

தமிழக தென் மாவட்டங்களில் பல காய்கனி வணிக மையங்கள் மற்றும் சந்தைகள் இருந்தாலும் விவசாயிகளான எங்களுக்கு உரிய உள்கட்டமைப்பு வசதி முறைகள் மற்றும் ஊக்க திட்டங்களும் நடைமுறை அளவில் செயல்படுத்தப்படவில்லை. நாங்கள் விளைவிக்கும் காய்கனிகளை உள்ளூர் வியாபாரிகளுக்கும் கமிஷன் கடைகளுக்கும் மொத்த விற்பனைக்கு அவர்கள் கூறிய விலைக்கு கொடுத்துவிட்டு நாங்கள் விவசாயத்திற்கு முதலீடு செய்த தொகைக்கு கூடுதலாக சழல ஆயிரங்களை மட்டும் இலாபமாகவும் சில நேரங்களில் என்னவென்று தெரியாமல் இருந்த எங்களுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க கல்வி இயக்ககத்தின் (SAMETI) சார்பில் அவர்கள் வழங்கிய வேளாண் மற்றும் தோட்டக்கலை விளைபொருட்களின் தினசரி சந்தை நிலவரம் (DMI) எங்களது விவசாய வாழ்விற்கு ஒரு திருப்புமுனையாகவும் அவர்கள் வழங்கிய தினசரி சந்தை நிலவர பட்டியல் எங்களது உழைப்பிற்கு பேருதவியாக அமைந்தது.

நான் கடந்த 12 ஆண்டுகளாக விவசாயம் செய்கிறேன். நாங்கள் விவசாயம் செய்யும் பகுதியானது பாசன நீர்பிடிப்பு பகுதி என்பதால் காய்கனிகள் மற்றும் கிழங்கு வகைகளையும் அதிகமாக பயிரிட்டுள்ளேன். கரீஃப் பருவத்தில் (ஜீன் - அக்டோபர்) தக்காளி, கத்தரி அதிக அளவில் பயிரிட்டு நல்ல மகசூல் தந்த நேரத்தில் வடகிழக்கு பருவமழையால் அதிக அளவில் விளைந்த தக்காளி விலை போகாமல் நஷ்டமடைய நேர்ந்தது. குறிப்பாக அதிக விளைச்சல் தந்த தக்காளி அழுகிபோனது மட்டுமில்லாமல் அவற்றை வீணாக

ஆற்றில் போடவும் நேர்ந்தது. மேலும் அருகிலுள்ள மாவட்டங்களில் காய்கனிகளின் வரத்து குறைவினால் சந்தையில் விலையும் உயர்ந்தது.

இந்த சமயத்தில் தான் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க கல்வி இயக்ககத்தின் (SAMETI) சார்பில் மூலமாக கைபேசியில் சிறு தகவல் (SMS) வழியாக சென்னை - கோயம்பேடு, ஒசூர், கோவை, மதுரை, ஒட்டன்சத்திரம், திருச்சி, திருநெல்வேலி போன்ற மிகபெரிய சந்தைகளின் தினசரி விலை நிலவரத்தினை (DMI) அறிந்து கொண்டதன் மூலம் இதுவரை நான் உற்பத்தி செய்து வந்த காய்கனிகளின் விலையை நானே நிர்ணயித்து எந்த ஒரு இடைதரகர்களின் இடர்பாடு இல்லாமல் உள்ளூர் சந்தைக்கும் அதிக அளவில் விளைந்த காய்கனிகளை தமிழகத்தின் பிற மாவட்டங்களில் உள்ள விவசாய சந்தைக்கும் நானே நேரிடையாக காய்கனிகளை வியாபாரம் செய்கிறேன்.

இதனால் சில ஆயிரங்களையும் சில நேரங்களில் நஷ்டத்தையும் சந்தித்து வந்த நான் மற்றும் என்னை போன்ற விவசாயிகளும் இனிமேல் ஆண்டுக்கு 1 முதல் 2 இலட்சங்களை பெறுவோம் என்றால் அது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க கல்வி இயக்ககம் மற்றும் இந்திய முன்னேற்ற நுழைவாயில் உன்னத கணிப்பியல் வளர்ச்சி மையம் (C-DAC) இணைந்து வழங்கும் தினசரி சந்தை நிலவரம் (DMI) இத்திட்டத்தின் மூலமும் தன்னலமற்ற தமிழ்நாடு வேளாண் விஞ்ஞானிகளின் ஈடு இணையில்லா அயராத உழைப்புமே ஆகும் என்பதை மனநிறைவோடு கூறிக்கொள்வதில் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் அடைகிறேன்.

வரும் காலங்களில் தமிழகம் மட்டுமில்லாமல் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் உள்ள விவசாய சந்தைகளின் தினசரி சந்தை நிலவரத்தினை அறிமுகப்படுத்தினால் நானும் என்னை போன்ற பல விவசாய மக்களும் இன்னும் முனைப்போடு விவசாயம் செய்வதோடு அல்லாமல் எங்கள் வாழ்வில் மேலும் பல முன்னேற்றங்கள் அடைவோம் என்று கூறி வேளான் விஞ்ஞானிகளுக்கு மீண்டும் ஒரு முறை என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.